# හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
## Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box. 1559, General Treasury, Ministry of Finance, Economic Stabilization & National Policies , Colombo 01, Sri Lanka

| | | | | |
|---|---|---|---|---|
| කාර්යාලය<br>அலுவலகம்<br>Office | දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | +94 11 2484600<br>+94 11 2484700 | ෆැක්ස්<br>பெக்ஸ்<br>Fax | +94 11 2484970<br>+94 11 2320042 |
| | | | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.treasury.gov.lk |


| | | | | |
|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | TO/REV/01/02/01 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your | | .05.2025 |

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
விஷேட செலவினப் பிரிவுகளின் தலைவர்கள்

**<u>2026 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு</u>**

அரச வருமானங்களை மதிப்பீடு செய்தல், சேகரித்தல் , கண்காணித்தல், மற்றும் அறிக்கையிடல் பற்றிய வழிகாட்டல்களை உள்ளடக்கி அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் 01/2015 மற்றும் 2015.07.20 ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் அதற்கான திருத்தங்கள் உள்ளிட்ட 30.12.2016 ஆம் திகதிய அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015(V) மற்றும் 2020.08.28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அதற்காக இந்தத் திணைக்களத்தினால் 2020.10.14 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அதற்கிணங்க அமைச்சு மற்றும் அமைச்சுக்களுக்கு கீழ் இயங்குகின்ற திணைக்களங்களினூடாக கீழே இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள வருமானக் குறியீடுகளுக்கான வருமான மதிப்பீடுகளைப் பெற்று அமைச்சினூடாக 2026 ஆம் ஆண்டிற்கான ஒரு வருமான மதிப்பீடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும் விஷேட செலவினப் பிரிவுத் தலைவர்கள் மூலம் (தலைப்பு 1 தொடக்கம் 25 வரை) வருமான மதிப்பீடு நேரடியாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

03. கீழே இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள வருமானக் குறியீடுகள் தொடர்பாக திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகச் செயற்படுகின்றார். அந்த வருமான குறியீடுகளின் கீழ் வருமானத்தைச் சேகரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சு மற்றும் அமைச்சுக்களுக்குக் கீழ் இயங்கும் திணைக்களங்களினூடாக ஒவ்வொரு வருமானக் குறியீட்டுக்கும் கீழ் 2026 ஆம் ஆண்டிற்குள் சேகரிக்க உத்தேசிக்கின்ற வருமானம் தொடர்பான மதிப்பீடு நி.பி.85 இன் படி இயலுமானவரை யதார்த்தமானதாகவும் , துல்லியமாகவும் தயாரித்து திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. அவ்வாறே கீழே குறிப்பிடப்பட்டுள்ள வருமான குறியீடுகளின் கீழ் 2026 ஆம் வருடத்திற்கான அமைச்சு மற்றும் விஷேட செலவின பிரிவுகளின் தலைவர்களினூடாக சேகரிப்பதற்கு உத்தேசிக்கின்ற வருமானம் தொடர்பாக மதிப்பீடு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் TOD/REV/03 இனை தயாரித்து 2025.06.13 அன்று அல்லது அதற்கு முன்னர் **<u>revenue@tod.treasury.gov.lk</u>** / **<u>/ jayathilake.jamm@tod.treasury.gov.lk</u>** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

| குறியீட்டு இல | விபரம் |
|---|---|
| 20.02.01.99 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் வாடகை - ஏனைய வாடகைகள் |
| 20.02.02.99 | வட்டி - ஏனையவை |
| 20.03.01.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - திணைக்கள விற்பனைகள் |
| 20.03.02.99 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிருவாக கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் – நானாவித |
| 20.03.03.02 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - தண்டப்பணம் மற்றும் அரசவுடமையாக்கள் - ஏனையவை |
| 20.03.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுகைகள் |
| 20.05.99.00 | நடைமுறை மாற்றல்கள் - தேசிய லொத்தர் சபையும் ஏனைய மாற்றல்களும் |

05. இது தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் 0112484994 எனும் தொலைபேசி இலக்கத்துடன் பணிப்பாளர் (வருமானம்) தொடர்புகொள்ளவும்.

**ஒப்பம் / ஏ.என்.ஹபுகல**
பணிப்பாளர் நாயகம்
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

பிரதி :- 01. கணக்காய்வாளர் நாயகம்
02. பணிப்பாளர் நாயகம் - அரசிறைக் கொள்கை திணைக்களம்

( படிவ இல: TOD/REV/03 )

# 2026 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடுகள

(i) சட்டம் / அதிகாரம் :- (தொடர்புடைய சட்டவாக்கங்கள் அல்லது சுற்றுநிருப அறிவுறுத்தல்கள்)

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் அல்லது நிறுவனங்கள்) தலைப்பு இல :-

(iii) வருமான வகை :-

(iv) வருமானப் குறியீட்டு இலக்கம் :-

| விபரம் | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் 2025 | | | 2026 ஆம் ஆண்டிற்காக மதிப்பீட்டு வருமானம் | திட்ட ஏற்பாடு | | நிரல் 3 இற்கும் 4 இற்கும் இடையிலான மாற்றத்திற்கான காரணம | நிரல் 4 இற்கும் 6 இற்கும் இடையிலான வேறுபாடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2024 | அடிப்படை மதிப்பீடு | திருத்தப்பட்ட மதிப்பீடு | 2025.05.31 அன்று வரையான உண்மை வருமானம் | | 2027 | 2028 | | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | | | | | | | |

(நிரல் இல. 9 மற்றும் 10 ஆகியவற்றை தகுதியான காரணங்களுடன் பூர்த்திசெய்வது கட்டாயமானதாகும். )

சரியானதென உறுதிப்படுத்துகிறேன்

..................................................................

செயலாளர் / திணைக்களத் தலைவர் /மாவட்டச் செயலாளர்

திகதி :-

(பதவி முத்திரை)